**செய்தி வெளியீடு எண்: 679** **நாள்:05.10.2019**

**செய்தி வெளியீடு**

மின் ஆளுமை, ICT மற்றும் BPM ஏற்றுமதிகள், உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட SaaS நிறுவனங்களின் எண்ணிக்கை, ICTயில் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது போன்றவற்றில் தமிழகம் தொடர்ந்து இந்தியாவில் முன்னணி மாநிலமாக உள்ளது.

தமிழக அரசின் பல்வேறு மின்-ஆளுமை முயற்சிகளை பகிர்ந்து கொள்வதற்காக, தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் FICCI ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த EczITe 2019 “தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் குடிமக்களை மேம்படுத்துதல்” குறித்த விழாவானது, சென்னை ஹோட்டல் லீலாவில் 2019 அக்டோபர் 04 ஆம் நாளன்று நடைபெற்றது. "முன்கணிப்பு ஆளுகையின் மூலம் குடிமக்களை மேம்படுத்துதல்" என்ற கருப்பொருளைக் கொண்டு தேசத்தின் மிகப்பெரிய மின்-ஆளுமை நிகழ்வுகளில் ஒன்றாக, தமிழக அரசு மேற்கொண்ட பல்வேறு உலகத் தரம் வாய்ந்த மின்-ஆளுமை மற்றும் டிஜிட்டல் உருமாற்ற முயற்சிகள் குறித்து அனைத்து தரப்பினரும் விவாதிக்க வழிவகை செய்தது. பிளாக்செயின், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல், IoT, பொருண்மை தரவு பகுப்பாய்வு போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மூலம், தமிழகத்தில் மாநில அளவில் மின்-ஆளுமைக்கான எதிர்கால முன்னுதாரணத்தை உருவாக்குதல் குறித்து விவாதிக்கப்பட்டது.

எரிசக்தி, சுகாதாரம், கல்வி, வேளாண்மை, உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம், திறன்கள், சிறு-குறு தொழில் நிறுவனங்கள் ஆகிய துறைகளில் பல்வேறு முயற்சிகள் மற்றும் கொள்கைசார் விவாதங்களை முன்னெடுப்பதில் தமிழக அரசு, பிற பங்குதாரர்களுடன் இணைந்து இந்தியாவின் வணிக மற்றும் தொழில்துறையில் மின்-ஆளுமை தளத்தை உருவாக்க தொடர்ந்து முயற்சித்து வருவது குறித்து விளக்கப்பட்டது.

தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். பி. உதயகுமார் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். அவர் தனது உரையில், தமிழக அரசு மேற்கொண்ட பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்துரைத்தார். மேலும் உட்கட்டமைப்புகளை வளப்படுத்தி, தமிழக அரசின் மின்-ஆளுமை மூலம் குடிமக்களை மேம்படுத்துவதும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதும், குடிமக்களுக்கான சேவைகளை வரையறுக்கும் எல்லைகளைக் கண்டுபிடிப்பதில் ஏற்படும் சவால்கள் குறித்தும் விளக்கினார்.

ஐஐடி மெட்ராஸ், ஐஐஎம் திருச்சி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் தமிழக அரசு இணைந்து தொழில்நுட்ப அமைப்புகளை உருவாக்குவதிலும், குடிமக்களை மேம்படுத்த பல்வேறு சேவைகளை வழங்குவதையும் அவர் தெரிவித்தார். இதர துறைகளில் சேவைகளை வழங்குவதற்கான முயற்சிகளுக்கு தேவையான உதவிகளை வழங்குவதில் தகவல் தொழில்நுட்பத் துறையின் பங்களிப்பையும் எடுத்துரைத்தார். மேலும் விவசாயத்திற்கான உழவன் செயலி மற்றும் பேரிடர் மேலாண்மைக்கான TN-ஸ்மார்ட் செயலி ஆகியவை பெரும் வெற்றியைப் பெற்றது குறித்தும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய தமிழக அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் பணத்திற்கான மதிப்பு பல்வேறு முயற்சிகள் மற்றும் திட்டங்களின் மையமாக இருக்க வேண்டும் என்று கூறினார். சேவைகள் எளிமையாகவும், எளிதில் மாற்றியமைக்கும் வகையிலும் இருப்பதோடு, மனித வள வளர்சசி மற்றும் கால மாற்றத்திற்கு ஏற்ப தொழில்நுட்பத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையிலும் அமைய வேண்டும். இதர அரசுத்துறைகளை டிஜிட்டல் மயமாக்கும் முயற்சிகளில், தற்போதுள்ள வளங்களை குறைப்பதற்கும் வழிவகுக்கிறது என்பதால், பங்குதாரர்களை சரியாக கையாள வேண்டும் எனவும் எச்சரித்தார்.

தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின் முதன்மை செயலாளர் டாக்டர். சந்தோஷ் பாபு இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சி குறித்த விரிவான உரையை நிகழ்த்தினார். அதில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தும்போது, கட்டாய தேவைகளின் அளவைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கியது குறித்தும், 1999 வரை மொபைல் போன்களுக்கான வசதிகள் இல்லாத எஸ்டோனியா நாட்டில், தற்போது கிட்டத்தட்ட அனைத்துவிதமான சேவைகளையும் ஆன்லைனில் பிளாக்செயினைப் பயன்படுத்தி வழங்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளது பற்றியும் அவர் தெரிவித்தார். எந்தவொரு சான்றிதழ்களையும் பெறுவதற்கு குடிமக்கள் அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியத்தை அகற்றுவதே முதன்மை நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் அதில் இ-சேவையின் வளர்ச்சி குறித்தும் விவரித்தார்.

பல்வேறு முயற்சிகள் மற்றும் திட்டங்களை இயக்க தகவல் தொழில்நுட்பத்துறைக்கு ரூ. 300 கோடியும், மாநில குடும்ப தரவுத்தள அமைப்பிற்கு (SFDB) இறுதி தீர்வுகளை வழங்குவதில் மின்-ஆளுமை கொள்கையின் செயல்திறன் குறித்தும் அவர் எடுத்துரைத்தார். மேலும்

தொழில்நுட்பத்தின் மூலம் குடிமக்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் 1000 க்கும் மேற்பட்ட சேவைகளை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளதையும், மின்-ஆளுமை முயற்சிகளை எளிதாக்குவதற்காக, தமிழ்நாட்டின் கிராமங்கள் அனைத்தும் 1GBPS இணைய சேவை இணைப்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கருப்பொருள் குறித்த உரையை வழங்கிய மின் ஆளுமை ஆணையரும், தமிழக மின் ஆளுமை முகமையின் தலைமை நிர்வாக அதிகாரியுமான திரு. சந்தோஷ் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள் பிளாக்செயின், IoT, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குடிமக்கள் சேவை குறித்த முயற்சிகளில் தனது தொழில்நுட்ப பயணத்தை பகிர்ந்து கொண்டார். சாதி, வருமானம், இருப்பிட சான்றிதழ்கள், பட்டா பரிமாற்றம் உள்ளிட்ட 120 சேவைகளை தற்போது வழங்கி வருவதாக அவர் கூறினார். G2C சேவைகள் மூலம் சுமார் 1.00 கோடி பரிவர்த்தனைகள் 10000 குடிமக்கள் சேவை மையங்கள் மூலம் நடைபெற்றதை பற்றி விளக்கினார். தடையற்ற, திறன் மிகுந்த சேவைகளை வழங்குவதற்காக தரவு ஒருங்கிணைப்பு மற்றும் பரிமாற்ற தளத்தை TNeGA உருவாக்கியுள்ளது குறித்தும், குறைந்த விலையில் உள்நாட்டிலேயே அளவிடக்கூடிய தீர்வுகளை உருவாக்குவதே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்கட்டமைப்பு மற்றும் சேவை அமைப்புகளின் பயனுள்ள பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்கு இடையேயான இடைவெளியை குறைக்கும். மேலும் தமிழக அரசு, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த ஆய்வுகளுக்காக திறன் மேம்பாட்டு மையம் (CEET) சமீபத்தில் அமைத்திருப்பதாக தெரிவித்தார். பிளாக்செயின் சேவை, இணையவழி தேர்வுகள், இ-சேவை மையங்கள், மக்கள் எண், அம்மா இ-கிராமம், மாநில குடும்ப தரவுத்தளம் (SFDB), மாநில பிளாக்செயின் கவசம் போன்ற பல்வேறு முயற்சிகளில், தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் (TNSDC) கீழ் தமிழ் மேகம், மேகக்கணினியில் மின்-ஆளுமை பயன்பாடுகளை நிர்வகிப்பதற்காக கம்ப்யூட்டிங் உள்கட்டமைப்பு முன்முயற்சி வழங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பமற்ற சொத்துக்களை நிர்வகிப்பதற்கான மேகக்கணி சார்ந்த சொத்து மேலாண்மை அமைப்பு TNeGA மூலம் உருவாக்கப்பட்டுள்ளது பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதன்மை இயக்குனர், திரு. விஜயகுமார் இ.ஆ.ப., அவர்கள் அந்நிறுவனத்தின் பயணம், 1996ல் தேர்தல் புகைப்பட அட்டை, குடும்ப அட்டை, ஸ்மார்ட் ஓட்டுநர் உரிமம் வழங்கியதன் மூலம் மின்-ஆளுமை எவ்வாறு தொடங்கப்பட்டது என்பது பற்றி ஒரு சுருக்க

உரையை அளித்தார். குறுகிய காலப்பகுதியில், சுமார் 200 நிகழ்வுகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவரகள் வீடியோ கான்பரன்சிங் மூலம் திறந்து வைத்தார் என்றும் அவர் தெரிவித்தார். தமிழ்நாடு சுகாதாரத் துறைக்கு பல்வேறு மருத்துவ சாதனங்களை வாங்குவதற்காக உலக வங்கியானது, ELCOT ஐ பரிந்துரைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்

FICCI தமிழ்நாடு மாநில கவுன்சிலின் தலைவர் செல்வி. கவிதா தத், EczITe 2019 கூட்டத்தில் உரையாற்றிய போது, ஃபிண்டெக் மையங்களை உருவாக்குதல், அனைத்து அரசு துறைகளாலும் ERP பயன்படுத்துதல் குறித்த அரசின் அறிவுரைகளை விளக்கினார். பிளாக்செயின் தேவைகள் பற்றிய சமீபத்திய அறிவிப்புகள், முக அடையாள தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, துவக்க நிலை மற்றும் மேலும் பல அரசாங்க சேவைகளை ஆன்லைனில் இயக்குவதற்கும் தகவல் தொழில்நுட்பத்தின் புதுமைக் கொள்கை தமிழக அரசின் கவனத்தை பெற வேண்டும் என வலியுறுத்தினார்.

EczITe 2019 இல் 650 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர், FICCI உறுப்பினர்கள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பல்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகள், பல்வேறு அரசு துறைகளின் அலுவலர்களும் கலந்து கொண்டனர். **EczITe** ல் 20 கண்காட்சியாளர்கள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் குறித்து விளக்கவுரை வழங்கினர். EczITe 2019 ஆனது ஐபிஎம், மைக்ரோசாப்ட், இன்போசிஸ், L & T ஸ்மார்ட் வேர்ல்ட் கம்யூனிகேஷன் மற்றும் பிறவற்றின் புகழ்பெற்ற பேச்சாளர்களுடன், 3 முழுமையான அமர்வுகளை கொண்ட ஒருநாள் நிகழ்வாக நடந்தது. இதில் தமிழகத்தில் மின்-ஆளுமையின் செயல்திறனை மேம்படுத்த பிளாக்செயின், செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், IoT மற்றும் பொருண்மை தரவு பகுப்பாய்வு உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது குறித்த மதிப்புமிக்க கருத்துகள் வழங்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**